# Products of Jamal Mohamed College

## Azolla Cultivation and Commercialization










ஜமால் முகமது கல்லூரியில் அசோலா வளர்ப்பு

திருச்சி, மார்ச் 21: திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் பசுமை வளாகம் மற்றும் இயற்கை பராமரிப்புப் பிரிவுடன் தாவரவியல் துறையும் இணைந்து அசோலா எனும் பாசி வளர்த்து பயன்பாட்டுக்கு வழங்குகிறது.

கால்நடைத் தீவனங்களில் குறிப்பிடத்தக்கது அசோலா எனும் பாசி. கால்நடைகளின் ஆரோக்கியத்துக்குத் தேவையான அமினோ அமிலம் மற்றும் வளர்ச்சிக்குத் தேவையான கால்சியம், பொட்டாசியம், துத்தநாகம், பாஸ்பரஸ், இரும்புச் சத்து முதலானவைகள் உள்ளன.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த கால்நடைத் தீவனத்தை கல்லூரியின் தாவரவியல் பிரிவுத் தயாரித்து, விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. இதன்படி, தயாரிக்கப்பட்ட அசோலா தீவனத்தை பயனாளிகளுக்கு வழங்கும் நிகழ்வு கல்லூரி வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

கல்லூரியின் செயலர் ஏ.கே. காஜா நஜீமுதீன் பயனாளிகளுக்கு தீவனத்தை வழங்கினார். நிகழ்வில் கல்லூரியின் உதவி செயலர் க. அப்துஸ் சமது, முதல்வர் இஸ்மாயில் முகைதீன், துணை முதல்வர் முகமது இப்ராஹிம், விடுதி நிர்வாக இயக்குநர் கே.என். முகமது பாசில், தாவரவியல் துறைத் தலைவர் மற்றும் பேராசிரியர்கள், மாணவர்கள் பலர் பங்கேற்றனர்.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் தயாரிக்கப்பட்ட அசோலா தீவனத்தை பயனாளிக்கு வழங்கும் கல்லூரிச் செயலர் ஏ.கே.காஜா நஜீமுதீன். உடன், நிர்வாகத்தினர்.

## Health mix product of Jamal Mohamed college




## Hand Sanitizer




